


# இந்த பூமியில் மரணமற்ற வாழ்க்கை

நாம் வாழும் பூமியில் ஏன் இவ்வளவு தீமைகள், அநியாயங்கள் நடக்கிறது? ஏன் விபத்துக்கள், நோய்கள்? கடவுள் இருப்பாரானால் அவருடைய திட்டம் என்ன? எப்பொழுது நீதியான அமைதியான சமுதாயம் ஏற்படும்? யுத்தங்கள் இல்லாத உலகமாக எப்பொழுது மாறும்? இதற்கான பதிலை கடவுள் வெளிப்படுத்தியிருக்கிறாரா? எங்கே?



நீதியான அரசாங்கம் ஏற்படுத்தப்படுமா?

போரும் அழிவும் எப்பொழுது இல்லாது போகும்?

அநீதி செய்ப்பவர்கள் உடனே தண்டிக்கப்படும் ஆட்சி வருமா?

மக்கள் எல்லோரும் அநியாயம் செய்யாது இருக்கும் காலம் வருமா?

எல்லா மக்களும் மகிழ்ச்சியாக இருக்கும் நீதியான அரசாட்சி வருமா?

இறந்தவர்களை மறுபடியும் இந்த உலகில் பார்க்கமுடியுமா?

இந்த உலகில் மரணமே இல்லாது மகிழ்ச்சியாக வாழமுடியுமா?




இந்த கேள்விகளுக்கு பதில் ஆம் என்பது. அப்படிப்பட்ட ஒரு காலம் சீக்கிரத்தில் வர இருக்கிறது. உலகம் முழுவதும் ஒரே நீதியான அரசாங்கம் வரப்போகிறது. தேவனுடைய அந்த ராஜ்யத்தில் எல்லா மக்களும் இன, மத, ஜாதி வேறுபாடு இன்றி சமத்துவமாக, யாருக்கும் தீமை செய்யாது சமாதானமாக வாழ்வார்கள். உண்மையான ஒரே தேவனுடைய திட்டத்தை படிக்கும்போது நாம் இதைப்பற்றி தெரிந்து கொள்ளலாம்.

**தேவனுடைய திட்டம் எங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது?**

உலகில் மிக பழமையான புத்தகமான வேதாகமத்தில் தேவன் அவருடைய திட்டத்தை மறைமுகமாக வெளிப்படுத்தியிருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு நீதியான தேவனை தேடுகிறவர்களுக்கு, வேறுபாடின்றி எல்லா மக்களும் தேவனால் காப்பாற்றப்பட வேண்டும் என்று விரும்பும் நல்ல மனம் கொண்ட ஒரு குறிப்பிட்ட குணாம்சமுடைய மக்களுக்கு மட்டும் தேவன் இந்த திட்டத்தை வெளிப்படுத்துகிறார். அவர்கள் மட்டுமே இந்த வேதாகம ரகசியங்களை ஆர்வமுடன் தேடி புரிந்து கொள்ள முடிகிறது. இந்த காலத்தில் அவர்களுக்கு வெளிப்படுத்தப்படும் இந்த ரகசியங்கள் வரப்போகும் தேவனுடைய ஆட்சி கால கட்டத்தில் எல்லா மக்களுக்கும் வெளிப்படுத்தப்படும். அன்று எல்லா மக்களும் புரிந்து கொள்வார்கள்.

“கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள்”. Isaiah 2:2




### தேவன் இந்த ரகசியங்களை யாருக்கு வெளிப்படுத்துகிறார்?

இன்று தேவன் தம்மை மறைத்துக் கொண்டிருக்கிறார். உண்மையாக தம்மை தேடுகிறவர்க்ளுக்கு அவர் தன்னை வெளிப்படுத்துகிறார். அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய அரசாங்கம் வரப்போகிறது என்பதை புரிந்து அதற்க்கு தங்களை தயார்படுத்திக் கொள்வார்கள். நீதியை விரும்புகிறவர்கள் யார், எந்தவிதத்திலும் அநியாயத்தையும் பாவமான காரியங்களையும் ஏற்றுக் கொள்ளாதவர்கள் யார் என்று பிரித்து காட்டவே தேவன் இந்த கால கட்டத்தில் தம்மை வெளிப்படுத்தவில்லை.

### தேவனுடைய ராஜ்யம்

நீதியை விரும்பி உலக காரியங்களை விரும்பாது தேவனுக்கு கீழ்ப்படிகிற அப்படிப்பட்ட தேவனுடைய பிள்ளைகளை தெரிந்தெடுக்கும் வேலை முடிந்ததும் அவர் அவரது **அரசாட்சியை** பூமியில் ஏற்படுத்துவார். அப்பொழுது எல்லா மனிதர்களும் மீண்டும் உயிர்த்தெழுந்து வருவார்கள். மனிதன் படைக்கப்பட்ட பின்பு தேவனோடு இருந்த உறவு இல்லாது போன நிலையில் அவருடைய அரசாட்சி பூமியில் ஏற்படுத்தப்பட்ட பின்பே தேவனோடு மீண்டும் மனிதர்களுக்கு உறவு ஏற்படப்போகிறது.


எல்லா மனிதர்களும் தேவனுடைய நீதியை கற்றுக் கொள்வார்கள். எல்லா மனிதர்களும் சத்தியத்தை புரிந்து கொள்வார்கள். அப்பொழுது பூமி முழுவதும் அவரது நீதியான அரசாங்கம் இருக்கும். கிறிஸ்துவோடு சேர்ந்து நீதிமான்கள் அரசாட்சி செய்வார்கள். தவறு செய்பவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள். நீதியின்படி நடப்பவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். பூமி முழுவதும் எந்த தீமைகளும் இல்லாது, அநியாயம் செய்யும் அரசாங்கங்கள், அமைப்புகள், பிரிவுகள் எதுவும் இருக்காது. மத, ஜாதி, இன வேறுபாடின்றி எல்லா மக்களுக்கும் சம நீதி கிடைக்கும். அது எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் சோசியலிச அமைப்பைப்போல, ஆனால் நீதியான அரசரின் மேற்பார்வையில் நீதிமான்கள் செய்யும் ஆட்சியாக இருக்கும்.

“நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து, பூமியைத் தமது வாக்கின் கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார்”. Isaiah 11:4

இந்த தேவனுடைய திட்டங்களைப் பற்றி வேதாகமத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தேவன் அதை இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமும் என்று எல்லோரும் புரிந்து கொள்ள முடியாதபடி கொடுத்திருக்கிறார். ( ஏசாயா 28:10 ) ஆகவே எப்பொழுதுமே தேவன் சத்தியத்தை தன்னுடைய பிள்ளைகள் மூலமாகவே கொடுக்கிறார். முதலில் அவர்களுக்கு புரியவைத்து பின்பு அவர்கள் மூலமாக மற்றவர்களுக்கு தெரியப்படுத்துகிறார். ( ஏசாயா 28:11 ) ஆகவே நீங்களாக வேதாகமத்தை படித்து சத்தியத்தை புரிந்து கொள்ள முடியாது. ஆனால் அவற்றை புரிந்து கொள்ள சத்தியம் ஏற்கனவே கொடுக்கப்பட்ட சகோதரர்கள் மூலமாக கேட்டு அதற்கு பின்பு வேதாகமத்தை படித்தால் புரிந்து கொள்ள முடியும்.

“நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா” என்றான். அதற்கு அவன்: “ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும்” என்று சொல்லி; பிலிப்பு ஏறி, தன்னோடேட உட்காரும்படி அவனை வேண்டிக்கொண்டான். Acts 8:27 - 35

மேலும் சத்திய விளக்கங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளவும். **YouTube**ல் சத்திய பாடங்கள் பல கொடுக்கப்பட்டிருக்கிறது. "**Divineplan in**" என்று **YouTube**ல் தேடி அடிப்படை சத்திய பாடங்களை நீங்கள் கேட்கலாம். **http://www.divineplan.in/** - இந்த இணைய பக்கத்திலும் நீங்கள் பல சத்திய பாடங்களை படிக்கலாம்.




https://www.youtube.com/Divineplanin